(ஆ) ஆம் எனில் எப்போது?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

செல்வி சி. கனகதாரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரணாம்பட்டு தொகுதியானது வேலூருக்குப் பக்கத்தில் அமைந்து இருப்பதாலும், அப்பகுதி மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பதாலும், இப்பகுதி மாணவர்கள் பயன்பெறும் வகையில் கல்லூரி அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டக் கல்வித் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் தற்போது, சென்னை, மதுரை, திருச்சி, கோவை, திருநெல்வேலி ஆகிய ஐந்து மாவட்டங்களில் சட்டக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. Bar Council of India-வின் சட்ட விதியின்படி Section B(1)-ன்படி "A Law College shall be located at a place where there is atleast a district Court or Circuit District Court or within such distance thereof as the Bar Council of India permits" என்றிருக்கிறது. எனவே, மாவட்ட நீதிமன்றம் இல்லாத பேரணாம்பட்டு என்ற இடத்தில் சட்டக் கல்லூரி அமைத்திட வாய்ப்பே இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 188, திரு. கு. பிச்சாண்டி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

188—

உயர்கோபுர விளக்குகள்

***10355—திரு. கு. பிச்சாண்டி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2002 ஏப்ரல் 22

திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேசுவரர் திருக்கோயில் மலைப்பாதையிலுள்ள சாலை சந்திப்புகளில் உயர்கோபுர விளக்குகள் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவண்ணமாமலை அருள்மிகு அருணாச்சலேசுவரர் திருக்கோயில் மலைப்பாதையிலுள்ள சாலை சந்திப்புகளில் உயர்கோபுர விளக்குகள் அமைக்கும் திட்டம் எதுவும் இல்லை.

முற்பகல் 10-10

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை நகரிலே பல உயர்கோபுர விளக்குகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், பௌர்ணமி தினத்திலே பல இலட்சக்கணக்கான பக்தர்கள் மலையைச் சுற்றுவதற்காக வருகிறார்கள். அவ்வாறு வருகின்ற நேரத்திலே அவர்களுக்கு வசதியாக மலையைச் சுற்றும் பாதையிலே இப்படிப்பட்ட உயர்கோபுர விளக்குகளை அமைத்தால், வருகின்ற பக்தர்களுக்கு வசதியாக இருக்கும். இன்றைக்கு திருப்பதியைப் போல் திருவண்ணாமலை நகர் பல இலட்சக்கணக்கான பக்தர்கள் வரக்கூடிய தலமாக மாறியிருக்கின்ற காரணத்தால், அதிலேயும் மலை சுற்றுவதுதான் முதல் இடமாக இருக்கின்ற காரணத்தால், மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அதற்கு முதலிடம் கொடுத்து, அப்படி அதிக அளவிலே மக்கள் கூடுகின்ற பகுதிகளிலே இப்படிப்பட்ட பணிகளைச் செய்ய முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேசுவரர் திருக்கோயில் மலைப் பாதையிலுள்ள கிரிவலப் பாதைச் சாலைச் சந்திப்புகளில் உயர்கோபுர விளக்குகள் —Flag Mast Light— என்று சொல்லக்கூடிய அந்த உயர்ந்த கோபுர விளக்குகள் அமைக்கக்கூடிய அளவிற்கு தற்சமயம் உபயதாரர்கள் மூலமாக 148 சோடியம் ஆவி விளக்குகள் 11-12-1997 ஆம் தேதியிலிருந்து அமைக்கப்பட்டிருக்கின்றன. கிரிவலப் பாதை அமைந்துள்ள இடம் கோயிலின் பெயரில் பட்டா இல்லை. 14 கிலோ மீட்டர் தூரம் 5 பஞ்சாயத்துகளுக்கும், திருவண்ணாமலை நகராட்சிக்கும் தொடர்புடைய எல்லையாகும். இவை யாவும் அந்தந்த ஊராட்சிகளினால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

2002 ஏப்ரல் 22]

அதோடு மட்டுமல்லாமல், ஆணாய்பிறந்தான் ஊராட்சி, அந்தியந்தல் ஊராட்சி, அடிமண்ணாமலை ஊராட்சி, வேங்கைக்கல் ஊராட்சி போன்ற பகுதிகளிலே நன்கொடையாளர்களைக் கொண்டு, பஞ்சாயத்து மூலமாகவும் 193 சோடியம் ஆவி விளக்குகள் போடப்பட்டு, நன்கு பராமரிக்கப்பட்டு வருகின்றன. எனவே தனியாக அதற்கு இப்போது அவசியம் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கு. பிச்சாண்டி.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடிகர் ரஜினிகாந்த் அவர்கள் மூலமாக அதற்கு விளக்குகள் போடப்பட்டிருப்பது உண்மை. ஆனாலும் இன்றைக்கு அதனுடைய மின்சாரக் கட்டணத்தையெல்லாம் அந்த ஊராட்சிகள் கட்டமுடியாமல் மின்சார விளக்குகள் எரியமுடியாத ஒரு நிலை இருக்கிறது. கோயிலிலே அதிக அளவு வருமானம் வந்து 3 கோடி ரூபாய்க்கு மேல் டெபாசிட் உள்ள ஒரு கோயிலாக இன்றைக்கு அந்தக் கோயிலினுடைய வருமானம் உயர்ந்திருக்கிறது. ஆகவே, இந்து சமய அறநிலையத் துறை இப்படிப்பட்ட வருமானம் வரக்கூடிய கோயிலிலாவது மக்களின் அடிப்படைத் தேவைகளை அதிலே இருக்கின்ற நிதியிலிருந்து செய்ய முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய கோரிக்கை யோசிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பௌர்ணமி நிலவிலேதானே நடக்கிறார்கள். பிறகு எதற்கு விளக்கு? (சிரிப்பு)

வினா எண் 189, திரு. ப.வெ. தாமோதிரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

189—

மருத்துவமனையில் வசதி

***5209—திரு. ப.வெ. தாமோதிரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—